# HDFC வங்கி

பன்முகப்படுத்தப்பட்ட நிதித் தீர்வுகள் மூலம் வர்த்தக சமூகம் உள்ளிட்ட இலங்கை மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் வாழ்விடம் மற்றும் அதற்கான ஆதரவினை வழங்கும் அனைத்து பங்குதாரர்களுடன் ஒன்றுபட்டு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தேசத்திற்கு சேவையாற்றிய வங்கியுடன் உங்களின் வங்கி தொழிலினை முன்னேற்றுவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

வங்கி வளர்ச்சியில், வங்கியானது புதிய நோக்கினைச் செயற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

HDFC வங்கியில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் கூடிய திறமையான ஆற்றல்மிக்க பெறுபேறுகள் கொண்ட தனிப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு (தரம் III (1))**

**முக்கிய பொறுப்புகள்**

- கிளைகள் உட்பட வங்கியின் அனைத்துப்பகுதிகளிலும் கணக்காய்வு, விசாரணைகள் மற்றும் பிற பணிகளை திட்டமிட்டு திறம்படச் செய்தல்.
- ஆபத்து அடிப்படையிலான கணக்காய்வு எண்ணக்கருவினை புரிந்து கொள்ளல் மற்றும் வங்கித் தொழிலில் காணப்படும் நடவடிக்கைகள் தொடர்பான ஆபத்துகள் பற்றி அறிந்திருத்தல்.
- கணக்காய்வில், கணக்காய்வு குழுவினை மேற்பார்வை செய்து அதன் வளர்ச்சியினை பயனுள்ள விதத்தில் முகாமை செய்தல், குறித்த கால எல்லை அடையப் பெற்றுள்ளது என்பதனை உறுதி செய்தல், கணக்காய்வு நோக்கம், போதுமான அளவில் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்தல் மற்றும் கணக்காய்வு செயல் முறையுடன் ஒன்றித்து செயல்படல்.
- கணக்காய்வு அறிக்கைகளை தயாரித்தல் உட்பட சுயாதின கணக்காய்வு மற்றும் விசாரணைகளை பூர்த்தி செய்தல்.
- பிரதான உள்ளக கணக்காய்வாளரின் பணிப்புரைக்கு அமைவாக முறைமை தயாரிப்பு மற்றும் செயல்முறை விருத்தி உட்பட திட்டத்தின் ஏனைய விடயங்களில் திறம்பட பங்குபற்றல்.

**தகைமை அளவுகோள்**

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அங்கத்துவம் (ICASL)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் சங்கம் (ACCA)/ சான்றளிக்கப்பட்ட முகாமை கணக்காளர்கள் (CMA) / இங்கிலாந்தின் முகாமை கணக்காளர்களின் பட்டய நிறுவனம் UK (CIMA)

  அல்லது

- நிதித் துறை அல்லது / கணக்கியல் / வணிகம் / வியாபார நிருவாகம் / முகாமைத்துவம் / பொருளியல் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலை கழகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு பட்டம்
- வங்கித் துறையில் பூரண தொழில்சார் தகைமை காணப்படுவது மேலதிக நன்மையாக கருதப்படும்.
- நிதி சேவைப் பிரிவில் ஒரு முகாமையாளராக / உதவி முகாமையாளராக கடமையாற்றிய 05 வருட கால அனுபவம்.
- தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான கணக்காய்வு அனுபவம் மேலதிக நன்மையாக கருதப்படும்.
- கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்கள், மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் உட்பட ஏனைய சட்ட ரீதியிலான தேவைகள் பற்றிய பூரண அறிவு காணப்படல்.
- நிறுவனம் ஒன்றில் நிருவாக நடைமுறைகள் தொடர்பிலான சிறந்த அறிவு காணப்படல்.
- சிறந்த பகுப்பாய்வு விளக்கத்துடன் கூடிய எழுதும் திறன்.

**வயது எல்லை :** 45 வயதுக்கு உட்பட்டவராக இருப்பது விரும்பத்தக்கது.

சரியான விண்ணப்பதாரிகளுக்கு ஒரு கவர்ச்சிகரமான ஊதிய கொடுப்பனவு வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் செயற்பாடுகள்**

விண்ணப்பங்கள் யாவும் உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு 06.12. 2023 ஆம் திகதியில் அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும். பதவியின் பெயரினை மின்னஞ்சலில் குறிப்பிட்டு careers@hdfc.lk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.


**HDFC வங்கி**
**சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை,**
**தபால் பெட்டி இல 2085**
**கொழும்பு – 02**
**தொலைபேசி இல 0112356800**
**www.hdfc.lk**